# சோ தர்மன் புதினங்களில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

***இரா.ராஜேஷ் குமார்**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன்இணைவு பெற்றது)
கரூர்-5

நெறியாளர்
****முனைவர் எ. கற்பகம்**
இணைப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), கரூர்-5
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

**ஆய்வுச்சுருக்கம்**

கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றியவர்கள் தமிழர்கள். அவர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் சிறந்து விளங்கியதை அகச்சான்றுகளும் புறச்சான்றுகளும் ஆவணப்படுத்தியுள்ளன. அப்பண்பாடு என்பது பழக்கவழக்கம், நம்பிக்கை, சமுதாய அக்கறை, கலை போன்ற பல்வேறு கூறுகளைக் கொண்டது. அவை போன்ற சிறந்த பண்புகளால்தான் மனிதன் விலங்குகளிடமிருந்து வேறுபட்டு நிற்கிறான் அவன் உள்ளத்தில் சிறந்த அனுபவங்கள் நிறைந்து பண்பட்டு அவை பண்பாடுகளாக உருப்பெறுகின்றன. மக்கள் வாழும் பகுதி கிராமம் நகரம் என இரண்டு பிரிவுகளைக் கொண்டது. கிராமம் என்பதற்கு நாட்டுப்புறம் என்ற வேறு பெயரும் உண்டு. அந்நாட்டுப்புறம் இயற்கை வளங்கள் நிறைந்த விவசாய நிலங்களையும் காடுகளையும் தன்னகத்தே கொண்டது இவ்வுலகம் நிலைத்திருப்பதற்கு அடிப்படை காரணம் நாட்டுப்புறமே. அப்பகுதியில் வாழும் மக்கள் பழந்தமிழர்களின் வாழ்வியல் நெறிகளைப் பாதுகாப்பவர்களாகத் திகழ்கின்றனர். அவர்கள் இயற்கையோடு இயைந்து, பாரம்பரிய மரபுகளைப் பின்பற்றி வாழ்கின்றனர். முன்னோர்கள் செய்த செயல்களில் உண்மைத்தன்மையும், நன்மையும் இருப்பின் அவற்றை பின்வரும் தலைமுறையினர் கடைபிடித்து வாழ்வது மரபு ஆகும். அதனடிப்படையில் சோ தர்மன் புதினங்களில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளை அடையாளப்படுத்தும் விதத்தில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னுரை

கதை சொல்லுவது கேட்பதுமான நிலைப்பாடு தொன்மை சான்ற வழக்காறுகளில் ஒன்றாகும். தமிழில் உரைநடை இலக்கியங்கள் வளர்ச்சி பெற்ற பின்னர், கதை இலக்கியத்தின் செல்வாக்குக் கூடியது இதனால் சிறுகதை, புதினம் முதலான இலக்கிய வடிவங்கள் மக்களிடம் பெருமதிப்பைப் பெற்றன.

தமிழ்ப்புதினங்களின் தொடக்கக் காலத்தில் கற்பனையும், மிகை எதார்த்தக் கூறுகளும் பெருமளவில் இடம்பெற்றன. பின்னர் கதைகளில் புனைவுக்குப் பதிலாக நடப்பியல்சார் தன்மை சிறப்பு பெற்றது கதைபடிக்கும் வாசகன் உள்ளத்தில் வட்டார உணர்வினைத் தோற்றுவிப்பவனாக புதினங்கள் அமைந்தன. ஆதலால் தமிழில் வட்டார இலக்கியம் என்ற ஒரு இலக்கியவகை உருப்பெற்றது. புதினங்களில் வட்டாரம் சார்ந்த இலக்கியங்களைப் புதுமைப்பித்தன், சண்முகசுந்தரம்,கி. ராஜநாராயணன் முதலானோர் முன்னோடிகளாகத் திகழ்ந்து வளர்த்தெடுத்தனர்.

தமிழகத்தின் மழையளவில் மிகவும் பின்தங்கிய வட்டாரமான கரிசல் வட்டாரத்தைக் களமாகக் கொண்டு கதைகளைப் படைத்து வருபவர் சோ தர்மன் ஆவார். அவரது படைப்புகள் அப்பகுதி மக்களின் வாழ்வியலையும், வாழ்க்கை பிரச்சனைகளையும் எடுத்துரைக்கின்றன. அவ்விடங்களில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்களை கூறுகிறார். எனவே எவ்வாறு கூறப்படும் பழக்க வழக்கங்களில் அவர்களின் உணவு முறை, அணியும் ஆடை அணிகலன்கள், அவர்களின் தொழில், சடங்குகள், நம்பிக்கைகள் ஆகியன பற்றி இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

**பழக்கவழக்கங்கள்**

"பழக்கத்தின் காரணமாக வழக்கம் ஏற்பட்டு அதிலிருந்து நிலைபெறுகின்றது' என்று மரபுக்கு ச.வே.சுப்பிரமணியம் விளக்கம் தருவார்.

"எப்பொருள் எச்சொல்லில் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபு" என்று நன்னூலார் விளக்குகிறார்.

மரபு என்பது மாறக் கூடியதன்று. தொன்று தொட்டு வழக்கத்தின் காரணமாக வருவது.

"மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்" என்று தொல்காப்பியர் விளக்குகிறார்.

பழக்க வழக்கங்கள் ஒரு குழுவினரிடையே பலவாறாக அமைதல் போலவே பல்வேறு மரபுகளும் காணப்படுகின்றது.

"பழக்கம், வழக்கம், மரபு என்ற சொற்கள் ஒன்றோடொன்று உறவுடையன. ஒன்றின் வளர்ச்சி நிலையே மற்றொன்றின் தொடர்ச்சியாக அமைகின்றது. பழக்க. வழக்க, மரபுகள் எளிதில் மாற்ற முடியாதவை. அவை கால, இட, சூழ்நிலை அமைவுகளுக்குத் தக்க உருப்பெறுவன. அவ்வாறு உருப்பெறும் மரபுகளே சமுதாய நியதிகளாகக் கருதப்படுகின்றன. எனவே, பழக்கம் என்பது தனிமனிதனைச் சார்ந்தது என்றும், வழக்கம் சமுதாயத்தைச் சார்ந்ததென்றும், மரபு. சமுதாயம் விதிக்கும் கட்டுப்பாடு எனவும் கூறலாம். மேலும் பழக்கம் என்பது தொடக்க நிலையாகவும், வழக்கம் தொடர் நிலையாகவும், மரபு பண்பாட்டின் முதிர்நிலை எனவும் வகைப்படுத்தலாம். தனி மனிதப் பழக்கங்களே காலப்போக்கில் சமுதாய வழக்கங்களாக உருப்பெற்றுத் தலைமுறை தலைமுறையாக இடையறாது நிலைத்து வாழ்வுபெறும் நிலையில் மரபுகளாக வாழ்வு பெறுகின்றன" என்பாரின் விளக்கம் ஏற்புடையதாக அமைகின்றது.

**உணவு**

'சூல்' புதினத்தில் சோறு, கஞ்சி, கூழ், மாமிச உணவு போன்ற உணவு பழக்கமுறைகள் நாட்டார் பண்பாட்டுச் சிறப்புக்களை எடுத்துக் காட்டுகின்றன.

உணவு எனப்படுவது நிலதொடு நீரே

நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு

உடம்பும் உயிரும் படைத்திசினோரே"( புறநானூறு)

நிலத்தையும் நீரையும் சேர்த்தால் வருவது உணவு, நீரையும், நிலத்தையும் சேர்த்தவர்கள் இவ்வுலகில் உடம்பையும் உயிரையும் சேர்த்துப் படைத்தவர்கள் என்று புறநானூறு பொருள் கூறுகிறது.

சோ தர்மனின் சூல் புதினம் நீரோடும் நிலத்தோடும் சார்ந்து வரும் பாத்திரங்கள் பொருளாதாரத்தை வைத்தே உருவாக்கப்பட்டுள்ளன. அம்மக்களுடைய உணவும் அதற்குப் பயன்படுத்தும் பாத்திரங்களும் சோ தர்மனின் கதைகளில் மிகுதியாக சுட்டப்பட்டுள்ளன.

காணப்பயற்றுத் துவையலும் கம்மங்கஞ்சியும் தரையில் சிதறிக்கிடந்தன. கலயத்திற்குள் கரிசல் மண் கஞ்சியோடு கலந்து போயிருந்தது 'குதிரை வாலிச் சோற்றை கும்பா நெறயப்போட்டு மீன் குழும்பு ஊற்றி சாப்பிட்டுக் கொண்டிருந்தான் மூக்கன்". 'மோரும், தயிரும் ஓசியில் கிடைக்கும் வீடு கொப்பிளாயின் வீடு"(சூல்). உருளைக்குடியைச் சுற்றியுள்ள கிராமமக்கள் அரிசி, கேப்பை கம்பு, குருதவாலி போன்ற தானிய வகைகளை உணவாகக் கொண்டிருந்தனர் என்பதைத் சோ தர்மன் பதிவு செய்திருப்பதை அறியலாம்.

மொச்சைப் பயறுகளை அவித்துக் குமித்து வைத்திருந்தனர். "கறுப்பு மொச்சை, வெள்ளை மொச்சை, உருண்டை மொச்சை, பாசிப்பயறு, சுண்டல், கொண்டக் கடலை, தட்டப்பயறு என்று விதவிதமாய் இருந்தன"(கூகை).என்று கூகை புதினத்தில் காட்சி படுத்தியுள்ளார்.

"இடுப்பில் சொருகியிருந்த இன்னொரு முந்தியை எடுத்து அதிலிருந்த பொட்டலத்தை அவிழ்த்தாள். தாளில் சுற்றியிருந்த உப்புக்கல்லையும் வறுத்த மிளகாய் வற்றலையும் விரித்து வைத்தாள். தோண்டிக் கலயத்திற்குள் கையை ஒட்டி இரண்டு கம்மங்கஞ்சி உருண்டைகளை எடுத்து மூடியின் மேல் வைத்தாள்.

'இந்தா கொஞ்சம் தண்ணி குடிச்சிட்டுக்குடு.'

தோண்டிக்கலயத்தை இரு கை ஏந்தி ஆவலாய் வாங்கிய அப்புச்சுப்பன் அண்ணாந்து குடித்தான். புளிப்புடன் நீச்சுத் தண்ணீர், வயிறு குளிர்ந்தது. இரண்டு உருண்டைகளையும் கலயத்திற்குள் போட்டுக் கரைத்தாள். மிளகாய் வற்றலை அப்புச்சுப்பனின் முன்னால் வைத்துவிட்டுக் கரைத்த கஞ்சியை மூடி நிறைய ஊற்றி நீட்டினாள். இரண்டு மூன்று மூடிகள் குடித்த பின் மீதியைப் பேச்சி குடித்தாள்"( கூகை).பழைய உணவு முறைகளை தெரிந்துகொள்ள முடிகிறது.

'என்னடி இன்னியாரம் பச்சையப் போட்டு குத்துற அவிச்சுப் போட்டு குத்தலாமில்ல.'

'எங்க முடியுது மாடத்தியக்கா, விடிஞ்சு போயி அடஞ்சு வாரோம். அவிச்சு எங்கிட்டு காயப்போட அதுக்கு ஆரு காவலிருக்க.'

'பச்சக் குருதவாலிச் சோத்துக்கு வெஞ்சனம் வகையா இருந்தாத்தானடி சாப்பிட முடியும்.'

'வகைக்கு எங்க போக, ரெண்டு சூடக் கருவாட்ட பிச்சுப் போட்டு, பச்ச மொளகாய கீரிப்போட்டு உப்புச்சாரு வச்சு தொட்டுக்கிருவம்.'(தூர்வை)

**ஆடை அணிகலன்**

ஆடை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவைகளாளக விளங்குபவை: உடம்பின்மேல் அணிகின்ற எல்லா வகையான உடுக்கும் (உடுத்தும்) அமைப்புகளைச் சுட்டும்" என்று அமீரா முகைதீன் கூறுகிறார்.

"பாசிக்கலர் கண்டாங்கிச் சேலையை பின்கொசுவம் வைத்துக் கட்டியிருந்தாள் ரவிக்கையற்று"

“சின்னஞ்ச எனக்கு சரட்டையும், தண்டட்டியவும், தாரம்னு

சொல்லியிருக்கா, பாம்படம், கொப்பு குருட்டுத்தட்டு, கொணப்

புத்தட்டு காலுக்கு தண்ட மூக்குத்தி, புல்லாக்கு எல்லாம்

வச்சிருக்கா” (சூல்)

உழைக்கும் மக்களின் எளிமையான ஆடை அணிகலன்களை பண்பாட்டுச் சின்னங்களாக சோ தர்மன் தனது சூல் வழியே பதிவு செய்திருக்கிறார் என்பதை அறியமுடிகிறது.

**தொழில்கள்**

கரிசல் காட்டை விதைப்புக்குத் தயார்படுத்துவதே கோடை உழவுதான். கண்மாயின் கரம்பை மண்ணைச் சந்தனமாகவும் மக்கிய குப்பையையும் கூட கரிசல் மன்னோடு கலந்து பக்குவப்பட்டவைப்பதே கோடை உரவுதான் உழுது பக்குவப்படுத்தப்பட்ட கரிசல் நில மானது மழைத்துளிக்காக கருவுறுக் காத்திருக்கும் மணப்பெண்போல் காட்சியளிக்கும் சிறப்புடையதாக உழவானது அமைந்துள்ளது. என உழவின் சிறப்பினை ஒட்டிய வோள்ணமைச் சார்ந்து நடக்கக்கூடிய தொழில்கள் லாடம் கட்டும் தொழில், பட்டறைத்தொழில். தச்சுத்தொழில், ஆடு மாடுமேய்த்தல், தொழில் மட்பாண்டத் தொழில், கள் இறக்கும் தொழில்,சாராயத் தொழில் போன்றவை இன்னும் பல தொழில்களை சோ தர்மன் சூல் புதினத்தில் பதிவு செய்திருப்பதை அறியப்படலாம்.

**திருவிழா**

தமிழர் மரபுகளில் இன்றியமையாத இடத்தைப் பிடித்திருப்பது விழாக்கள் விழா என்பது அனைவரும் விரும்பி மகிழ்ந்து கொண்டாடுவது அது அன்பையும் பண்பபையும் வளர்க்கின்றது. உறவினை மேம்படுத்துகிறது. உள்ளத்திற்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் தருகிறது. நம் முன்னோர்களை நினைப்படுத்துவதாகவும் வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டுவதாகவும் அமைகிறது "விழாக்கள் பண்பாடு, நாகரிகம் மொழி வரலாறு, மரபு ஆகியவற்றை பறைசாற்றுவதாய் திகழ வேண்டும் கொண்டாட்டமும் மகிழ்ச்சியும் பொழுதுபோக்கும் நல்லுறவுமே விழாக்களின் நோக்கமாகும் தமிழர்கள் பல விழாக்களைக் கொண்டாடுகின்றனர் அதில் கண்மாய் ஏரி குளங்களில் நடத்தப்படும் மீன்பிடி திருவிழா குறிப்பிடத்தக்கது"(நாட்டுப்பற மரபுகள்).

தமிழகத்தில் கொண்டாடப்படும் பாரம்பரியத் திருவிழாக்களில் ஒன்று மீன்பிடித் திருவிழா மாதம் மும்மாரி பொழியவும், அதனால் செழிப்பான விளைச்சல் உண்டாகவும் மேலும், மக்கள் மகிழ்ச்சியோடும் நிறைவோடும் வாழவும் மீன்பிடி திருவிழா கொண்டாடப்படுகிறது. இவ்விழாவால் மக்களிடையே களிப்பும் ஒற்றுமையும் உருவாகிறது. "உருளைக்குடி கண்மாய் திருவிழாக் கூட்டமாய் மாறியது கைவலைகளும் வீச்சுவலைகளும் மீன்களை அரித்துத் தட்டியும் மீன்கள் குறையவில்லை, தரையில் தட்டும் மீன்களைத் துள்ளவிடாமல் பிடித்து ஏனங்களில் நிரப்பும் பெண்கள், சிறுவர்கள் ஆகாயத்தில் வட்டமிட்டு விருட்டென்று மின்னலாய்த் தரையிறங்கி குறி தப்பாமல் தன் விரல்களுக்கிடையில் மீன்களைத் தூக்கிச் செல்லும் பருந்துகள் கூட்டம்"(சூல்) இத்திருவிழாவில் மனிதர்கள் மட்டுமின்றி பறவைகளும் மீன்களை உணவாக பிடித்துச் செல்வதை அறிய முடிகிறது.

சித்திரை ஒன்னாந்தேதி கோயில்பட்டி செண்பகவல்லியம்மன் கோயில் தீர்த்தத் திருவிழா பிரசித்தம். "இரண்டு தேர் ஓடும். விடிய விடிய வேடிக்கைகள் நடக்கும். சிலம்பாட்டம், ஒயில் கும்மியாட்டம், கரகாட்டம், வில்லுப்பாட்டு, நாடகம் விடிய விடிய கூட்டம் அலைமோதும். சுற்று கிராமம் பூராவும் கூடார வண்டிகள் கட்டிப் போவார்கள். கோயில் மைதானம் களைகட்டிவிட்டது. இரண்டு தேர்களும் ஜோடித்து புதுப்பெண்ணாய் நிற்கின்றன" (தூர்வை) எனவும் புதினத்தில் காட்சி படுத்தியுள்ளார்.

**வழிபாடும் சடங்கும்**

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனித வாழ்வு பல பரிமாணங்களைப் பெற்றுள்ளது. மனிதனின் அச்சத்தின் காரணமாக தோன்றியதே வழிபாடு இயற்கையின் பஞ்சபூதங்களும் மற்ற உயிரினங்களும் மனிதனுக்குப் பயத்தை ஏற்படுத்தின. அதன் விளைவாக அவற்றையெல்லாம் அவன் வழிபட ஆரம்பித்தான். அவ்வாறு தான் வழிபாடு தோன்றியது. "பண்டைக் காலம் முதல் மக்கள் துன்பங்கள் நீங்கி உலகில் இன்பங்களைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கே வழிபாடு செய்து வந்துள்ளனர். வழிபாடு, விழா முதலிய சடங்குகள் மக்கள் பயன் கருதிச் செய்யப்படுவனவே மழைவளம் பெருகவும் தங்கள் வாழ்வு சிறக்கவும் தெய்வம் போற்றுகின்றனர்". (சங்கத்தமிழர் வழிபாடு மற்றும் சடங்குகள்) அவ்வழிபாடுகள் காலகாலமாக முன்னோர்களால் செய்யப்பட்டு வந்த சடங்குகளை அடிப்படையாக

வைத்துபின்பற்றப்படுகின்றன. “இரண்டு சாமிகளும் ஆளுக்கொரு மாவுக் கொட்டானைக் கையில் எடுத்துக் கொண்டார்கள். கூட்டம் ஒரு பக்கம் ஒதுங்கி நின்று வழிவிட்டது இருவரும் வேகமாக ஓடி ஓரிடத்தில் நின்று கொண்டு மாவை கையில் எடுத்து காற்றில் வீசினார்கள். மேகமே புகையாப்போ மேகமே மழையாய் பொழியாத மேகமே வெய்யிலுக்கு வழி விடு மேகமே காத்தோட ஓடிப்போ அப்பொழுது காற்றில் தூவிய தூள் மாவு மேகமாய் மாறி காற்றோடு போனது அதோடு சேர்ந்து மழையும் போய்விட்டது' உருளைக்குடியில் மழை விடாமல் தொடர்ந்து பல நாட்களாய் பொழிந்து கொண்டிருந்தது. அதனால் விவசாயம் உள்பட எந்த செயலும் பெறவில்லை. மக்களின் இயல்புநிலை மாறியது ஆகவே எங்களுக்கு மழை போதும் என்று கூறி மழையை வணங்கி அது நிற்பதற்காக சடங்கினை மேற்கொள்கின்றனர்.சிறுகசிறுக மழையும் நின்றது இதில் தம் மரபான இயற்கை வழிபாட்டினை பாரம்பரியமாக மக்கள் மேற்கொண்டுள்ளனர்” .(சூல்) என்பது காட்சிப்படுத்தபட்டுள்ளது.

**நம்பிக்கைகள்**

“நம்பிக்கை என்பது காலம் காலமாகத் தொன்றுதொட்டு வழக்கிலிருந்து வருவதாகும். 'தன்னால் புரிந்து கொள்ள முடியாத நிலையில் அதற்கான விளக்கத்தைப் பிறருக்கு எடுத்துரைக்க இயலாதபோதும் சிலவற்றை வெளிப்படுத்துகிற மனத்தின் எண்ணங்களை நம்பிக்கை எனலாம்”. (தமிழ் நாட்டுப்பறவியல்).

"நம்பிக்கை என்பது ஒரு உணர்ச்சி. இது எண்ணத்தின் இயக்கத்தோடு கலந்து வலுப்பெற்று நிலைத்தபோது அது ஒரு மனநிலை என்று சொல்லப்படுகின்றது. அந்த மனநிலை தொடர்ந்து நீடித்து உரமடைந்த போது அது உள்மனத்தின் உதவியைப் பெறுகிறது. அந்த நிலையில் அதற்கு மகத்தான சக்தி உண்டாகிறது".(நாட்டுப்பறவியல்) என்று நம்பிக்கை பற்றிய செய்தியனைக் கூறுவர்.

இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராத பொழுதம் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன' என்று நம்பிக்கைப் பற்றி சு. சக்திவேல் கூறுகின்றார்.

நாட்டுப்புறுவியலின் ஒரு பகுதியாக நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் திகழ்கின்றன. நாட்டுப்புறப் பண்பாட்டுக் கூறுகளுள் சடங்குகள், நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் அமைகின்றன. நம்பிக்கைகளும், சடங்குகளும் பண்பாட்டு வளர்ச்சியின் படிநிலைகள் என்று கருதலாம். சோ. தர்மனின் கதைகளில் கோவில்பட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமத்து கரிசல் நிலத்து மக்களின் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.

**கரிசல் வாழ்வில் கடவுள் வழிபாடு**

கரிசல் மக்களின் இறை வழிபாட்டு முறைகள் மற்ற பகுதி மக்களின் வழிபாட்டு முறைகளின்று மாறுபட்டு இருப்பதனைக் காண முடிகின்றது கரிசல்

பகுதியில் குறிப்பாகக் கிராமங்களில் அன்றாட ஆலய வழிபாடுகள் குறைந்தே காணப்படுகின்றன இந்து சமயத்தவர் பெரும்பான்மையினராக வாழும் கரிசல் சமுதாயத்தில் ஒவ்வொரு ஊருக்கும் ஒரு காவல் தேவதை உண்டு சக்தியின் வடிவங்களான இந்தக் காவல் தேவதைகள் மாரியம்மன், காளியம்மன் துர்க்கை அம்மன் வடக்கத்தி அம்மன் எனப் பற்பல பெயர்களில் அழைக்கப்படுகின்றன.ஊரில் நல்லது கெட்டது என ஒவ்வொரு நிகழ்விற்கும் இச்சிறு தெய்வங்களே பொறுப்பாக விளங்குவதாகக் கரிசல் சமூக மக்களால் நம்பமப்படுகின்றன. மழை பொய்த்த போதும் மழை மிக அதிகமாகப் பெய்து பெருகிய போதும் நன்றி சொல்லும் வகையில் கிராமத்து தேவதைகளுக்கு நேர்த்திக்கடனும் செலுத்தி வருகின்றனர்.

கரிசல் நில மக்கள் மரத்தை வழிபட்டனர். அதுமட்டுமல்லாமல் மேலே பறக்கக் கூடிய பருந்தினையும் கிருஷ்ணனாக நினைத்து வழிபட்டனர். "கண்களைச் சுருக்கி கைவிரல்களைக் கண்ணாம்பட்டையின் மேல வைத்து அண்ணாந்து பார்த்தான் சாத்தன். யெப்பா, மாயக் கிருஷ்ணா நீ எங்கப்பா போயிருந்த சாத்தன் பயபக்தியுடன் தரையில் மண்டியிட்டு எழுந்த போது பருந்து பறந்து போயிற்று. அதனைப் பார்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் அனைவரும் அம்மரத்தில் பருந்து மீது அமர்ந்திருந்த வேப்பமரத்தின் மீது ஏற மாட்டார்கள். பல் தீக்கக்கூட ஒரு குச்சி ஓடிக்க மாட்டார்கள் மரத்தடியில் யாரும் மாடுகள் கூட கட்டமாட்டார்கள் விரதமிருந்து ரெண்டாஞ் சனி மூணாம் சனியன்று திருவண்ணாமலைக்குப் போகிறவர்கள் முதல் சாமியாக வேப்பமரத்தைக் கும்பிட்டு விட்டுதான் போவார்கள்" (தூர்வை)

சங்க காலம் முதற்கொண்டே தமிழர்களிடம் தெய்வ நம்பிக்கை உள்ளது உலகம் கடவுளால் காக்கப்படுகிறது என்ற உண்மையை

“சேவல் அம்கொடியோன் காப்ப

ஏம வைகல் எய்தின்றால் உலகே” (குறுந்தொகை)

என்று குறுந்தொகையின் இடம்பெறக்கூடிய பாடலின் மூலம் அறியமுடிகின்றது.

அனைத்து ஊர்களிலும் கண்மாய்க்கரைகளில் உள்ள அய்யனார், கருப்பசாமி போன்ற தெய்வத்தோடும் இன்னும் வேறுபல தெய்வங்களும் இருப்பதை அறிய முடிகின்றது.

நேர்த்திக்கடன்

நேர்ந்து விடுதல் என்பது இந்து சமயத்தின் நேர்த்திக் கடன்களில் ஒன்றாகும். இந்த நேர்த்திக் கடன் சிறுதெய்வ, பெரு தெய்வ வழிபாடுகளில் வேறுபடுகின்றது. சிறுதெய்வ வழிபாடுகளில் ஆடு, கோழி போன்ற கால்நடைகளை இறைவனுக்கு என்று வீட்டிலேயே வளர்க்கின்றனர். பின்பு அந்த இறைவனின் திருவிழாவில் அதனை வெட்டி உண்கின்றனர். பெருதெய்வ வழிபாடுகளில் கால்நடைகளை கோவில்களில் ஒப்படைத்துவிடுகிறார்கள். இதைப் போல சிறு குழந்தைகளையும்

மனிதர்களையும் இறைவனுக்காக நேர்ந்துவிடும் வழக்கம் முற்காலத்தில் இருந்துவந்துள்ளது

கொன்னவாயனும் மக்கவாச்சியும் கோயிலுக்கு வந்திருந்தார்கள் இரண்டு மூன்று பிள்ளைகள் பிறந்து இது நாலாவதாகப் பிறந்த ஆண் குழந்தை இதுவும் தக்காது என்று ஐயர் கூற பிறகு பசுமாடு வாங்கி முருகன் காயில்ல விட்டு பண்டாரத்திடம் பிள்ளையை வித்திடு திரும்ப பண்டாரங்க ஏலம் போடும்போது நீ பிள்ளைய தத்து எடுத்துக்கோ, சனி நீங்கி சுகம் திரும்பும் என்று சொல்லியிருந்தார். அதன்படியே காவடியோடு தாங்களும் பசு மாடும் நடந்தே வந்து நேர்த்திக்கடன் செலுத்திவிட்டார்கள்"(தூர்வை) என்ற செய்தியினைத் தூர்வை என்ற புதினத்தில் வழி கிராம மக்களின் வட்டார வழக்கினை நினைவுப்படுத்தும் விதமாக எடுத்தியம்பியுள்ளார்.

மேலும் "மாசா மாசும் கடைசி வெள்ளிக்கு இருளக்குடிக்கு நடந்து மாரியம்மனைக் கும்பிட்டு வருவதையும் உள்ளூர் காவியம்மன் கோயில் வேண்டியது போல் குழந்தை பிறந்தால் மணியும் வல்லயக் கம்பும் எடுத்து வைப்பதாக நேர்த்திக்கடன் செய்ய இருப்பதை நினைத்தான்"(சூல்) என்று சூல் புதினத்தில் எதார்த்தமாக கூறியிருப்பதை அறியமுடிகிறது.

**பறவைகளின் நம்பிக்கைகள்**

ஊர்க்கண்மாய் நிரம்புமா என்பதற்கு கண்மாய்க்குள் உள்ள கருவேல மரங்களில் வலசைப் பறவைகள் கூடுகட்டும் இடத்தை வைத்து எடைபோடுகின்ற அறிவு அக்காலத்தில் கிராமங்களில் காணப்பட்டன. மரத்தின் உச்சியில் கூடு கட்டினால் அந்த ஆண்டு கண்மாய் முழுவதும் நிரம்பும். பாதியில் கூடு கட்டினால் கண்மாய் நிரம்பாது மழை குறைவாகவே இருக்கும் என்று அறியக்கூடியத் திறனை சோ தர்மன் அவர்கள் சூல் என்னும் புதினத்தில் வெளிப்படுத்தியுள்ளதை அறிய முடிகின்றது.

மேலும் உருளைக்குடி கிராமத்தில் தூக்கணாங்குருவி கூட்டை வைத்து மழை வரப்போவதை கண்டறிகின்றனர் மண்ணிலிருந்து எவ்வளவு உயரத்தில் தூக்கணாங்குருவி கூடுகட்டுகிறதோ அதைப் பொறுத்தே மழையின் அளவு இருக்கும் மேலும் கூட்டில் இரண்டு ஓட்டைகள் இருக்குமாம். ஒன்று கீழ்பக்கம் மற்றொன்று பக்கவாட்டில், பக்கவாட்டில் வாசல் தெற்கு பக்கமாக இருந்தால் வடகிழக்கு பருவமழை பெய்யும் எனவும், வடக்கு பக்கமாக இருந்தால் தென்மேற்கு பருவமழை பெய்யுமெனவும் தம் புதினத்தில் வழி கரிசல் வட்டார மக்கள் பறவைகளின் வாயிலாக நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர் என்பதனை உணரமுடிகின்றது

**சகுனம்**

சகுனம் என்ற சொல் சயமை, சவனம் என்று பேச்சு வழக்கில் இடம்பெறுவதுண்டு புதிதாக ஒரு செயலைப் பலரும் சேர்த்து மேற்கொள்ளும் நிலையிலும் தனிப்பட்ட நிலையிலும் சகுனம் பார்க்கும் வழக்கம் உள்ளது மனிதர்களின் செயல்பாடுகள், பறவை விலங்குகளின் செயல்பாடுகள் இவற்றைக் கொண்டு சகுனம் பற்றிய நம்பிக்கைகளும் அவற்றின் பலன்களும் அறியப்படுகின்றன.

நற்றிணையில் பறவைகள் நிமித்தத்தைக் கூறம் தலைவன் நம் வருகையைக் காக்கை முதலிய புள்ளினங்கள் அவருக்கு அறிவுறத்தினவோ என்று கூறவதாகப் பாடலொன்று அமைகின்றது.

"தோள்வழி யாப்ப ஈண்டுநம் வரவினைப்

புள்அறி வுறீஇயின் கொள்ளோ

தெளிதின்"(நற்றிணை)

என்ற வரிகள் பறவைகள் நிமித்தத்தை உணர்த்துகின்றன.

**கூகை**

காண்போர்க்கு அச்சத்தையும் அருவருப்பையும் தரும் ஆந்தை பெரும்பாலும் காட்டிடை வாழும் பகலில் இதற்கு கண் தெரியாது. இரவில் நன்கு கண் தெரியும். ஆந்தையைத் தீமையின் நிமித்தமாக மக்கள் தொன்றுதொட்டு சகுனமாக கருதினர் ஆந்தையின் அலறலைத் தீயநிமித்தமாகவே இலக்கியங்கள் சுட்டுகின்றன.

பள்ளக்குடியில் காளியம்மன் கோயில் பக்கத்திலிருந்து அந்த நிசம்த இரவில் மிதந்து வந்தது கூகையின் சத்தம். சரியாக நாலே நாலு சத்தம், கூகையின் சத்தம் தொடர்ந்து இடைவெளிவிட்டுக் கேட்டுக்கொண்டேயிருந்தது. காளியம்மன் கோயில் தெருபக்கம் நாலாபுறமும் சூழ்ந்து கொண்ட கூகை கூட்டம் சப்பரத்தைக் குறிவைத்து தாக்கியது. இரவில் மட்டுமே ஒளிரும் தீப்பந்தக்கண்களால் சப்பரத்தை சாம்பலாக்கியது. காளியின் ருத்ர தாண்டவம் என பறக்குடியில் பல வீடுகள் தீக்கரையாக்கப்பட்டன.

"ஒருரை உரைக்குமாகில் உற்றதோர் சாவு சொல்லுலும்

ஈருரையு ரைக்குமாகில் எண்ணிய கருமம் ஈடேறும்

மூவுரையுரைக்குமாயில் மோகமாய் மங்கை சேர்வாள்

நாலுரை உரைக்குமாயில் நாழியில் கலகம் வந்திரும்

ஐயுரைக்குமாயில் ஒரு பயணம் கிட்டும்

ஆறுரைக்குமாயில் அடுத்தவர் வரவு கூறும்

ஏழுரையுரைக்குமாகில் கிழந்த பொருள் மீளும்

எண்முறையுரைக்குமாகில் திட்டென சாவு நேரும்

ஒன்பதும் பத்தும் உத்தமம் மிகவே நன்று"(கூகை)

என்று கூகை கூவக்கூடிய எண்ணிக்கையை வைத்து நேரக்கூடிய நிமித்தங்களை சீனிக்கிழவன் என்ற கதாபாத்திரத்தின் வழியாக கூகையின் சகுணப்பாட்டினைப் பற்றி சோ தர்மன் அவர்கள் கூகை எனும் புதினத்தின் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

கார்த்திகை விழா.

கார்த்திகை மாதம் வந்துவிட்டால் கார்த்திகை தீபம் எற்றி அந்நாளில் தெண்ணை மட்டையை கொண்டு சொக்கப்பன் என்று நினைத்து அதனை எரிப்பார்கள்..

“சொக்கப்பனை கொழுந்துவிட்டு எரிந்து சாம்பலாய்க் கனத்தில் படியும். அந்தச் சாம்பலை ஊரோடு போட்டி போட்டு அள்ளி பெட்டிகளில் சேமிப்பார்கள். அந்தச் சாம்பலை வெள்ளாமைகளில் தூவினால் நல்ல மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கை. அதேபோல் சொக்கப்பனை எறியும்போது காய்ந்த பனை மட்டைகளைத் தீயில் சொருகி, எரிய வைத்து, பாதி எரிந்தபின், கரிக்கட்டையாய் எடுத்துப் போய் அதைத் தோட்டம் புஞ்செய்களின் நடுவே ஊன்றி வைப்பார்கள். கண் திருஷ்டி படாது என்ற நம்பிக்கை”.(தூர்வை)

முடிவுரை

மக்களின் பழக்க வழக்கம் நம் நாட்டின் தொன்மையையும் மனித உணர்வுகளையும் வரலாற்றையும் பறைசாற்றுவதாய் விளங்குகிறது அம்மக்களின் வாழ்வோடு ஒற்றிணைந்துள்ள நம்பிக்கைகள் அவர்களை வழிநடத்தியுள்ளன. உணவு ஆடை அணிகலன் தொழில்கள் போன்றவை மக்களின் வாழ்வியலை எடுத்துக்காட்டும் வகையில் படைக்கப்பட்டுள்ளன நாட்டுப்புற மக்கள் கொண்டாடும் விழாக்கள் பண்பாடு நாகரிகம் போன்றவை நிலைத்திருப்பதற்கும் வளர்வதற்கும் காரணிகளாக அமைந்துள்ளன இயற்கையால் நன்மை தீமை ஏற்பட்ட பொழுது அவற்றிற்கு நன்றி செலுத்தவும் அவற்றை அமைதிப்படுத்தவும் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்றைய நாகரிக உலகிய மக்களின் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும் மரபுகளான பழக்க வழக்கம் சடங்கு விழா நம்பிக்கை போன்றவற்றை அவர்கள் பின்பற்றி வருவதை சோ தர்மன் புதினத்தின் வழி இக்கட்டுரையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது

பார்வை நூல்கள்

சோ தர்மன் – தூர்வை
சோ தர்மன் - கூகை
சோ தர்மன் -சூல்
ச.வே.சுப்பிரமணியம் - இலக்கணத் தொகை யாப்பு பட்டியல்
புலியூர் கேசிகன் - தொல்காப்பபியம்
புலியூர் கேசிகன் - நன்னூல்
புலியூர் கேசிகன் - புறநானூறு
முத்தையா - நாட்டுப்பற மரபுகள்
சண்முகம் பிள்ளை. எம் - சங்கத்தமிழர் வழிபாடு மற்றும் சடங்குகள்
சற்குணவதி - தமிழ் நாட்டுப்பறவியல்
சு.சத்திவேல் -நாட்டுப்புறவியல்
புலியூர் கேசிகன் - குறுந்தொகை
புலியூர் கேசிகன் - நற்றிணை